**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 125/2023 PW . 3**

**பெயர் : பிரகாஷ்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்: வனவர், காரைக்குடி**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025

---

**(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>03.04.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கை வனக்கோட்டம், சிவகங்கை வனசரகம், காரைக்குடி பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2021ம் தேதி கரிசல்பட்டி பீட் வனவராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் கரிசல்பட்டி பிரிவு வனசரக அலுவலர் என்னை செல்போனில் தொடர்புகொண்டு பழைய நெடுவயல் கிராமத்தில் உள்ள கண்மாயில் மீன் பிடிக்க சென்ற நபர்களின் வலையில் நீர்நாய் சிக்கி உள்ளது என்று தகவல் சொன்னார். அதனை மீட்பதற்காக நான் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு வனக்காப்பாளர் கண்ணபிரான், வனக்காப்பாளர் சரவணன், மிகைப்பணி வனக்காவலர் கோபுர பாண்டியன் ஆகியோர் இருந்தார்கள். அங்கு நீர்நாய் ஒன்று நைலான் கயிறால் கழுத்தில் சுருக்கு போட்டு எதிரிகள் கட்டி வைத்திருந்தார்கள். நாங்கள் சென்ற பின்னர் சிறிது நேரத்தில் நீர் நாய் இறந்துவிட்டது. அப்போது எதிரிகளை விசாரித்தோம். மீன்பிடித்த போது அந்த வலையில் நீர்நாய் சிக்கிவிட்டதாக எதிரிகள் தெரிவித்தார்கள். அப்போது எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் சரவணன் பதிவு செய்தார். நானும் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். வனவர் சம்பவ இடத்தில் வைத்து H நமுனா தயார் செய்தார். மேலும் சம்பவ இடத்தில் பார்வைமகசர் (அ.த.சா.ஆ.5) ஸ்தல மகசர் (அ.த.சா.ஆ.4) ஆகிய ஆவணங்களை நான் தயார் செய்து அதில் கையொப்பம் செய்தேன். எதிரிகள் மற்றும் பிடிப்பொருட்களை வனசரக அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம்.

2. எதிரிகளை 1972 வன உயிர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 50ன் படி கைது செய்யப்பட்டு வனஉயிரினமான நீர்நாய் என்பதால் வனஉயிர் பாதுகாப்புச்சட்டம் அட்டவணை 2 பாகம் 2 வரிசை எண் 4ன் படி நீர்நாய் அரியவகை உயிரினம் என்பதால் திருப்பத்தூர் வனரசக அலுவலவன குற்ற எண். 18/2023 பதிவு செய்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து கனம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம். எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துகளில் ஒன்றான நீர்நாயை எஸ்.புதுார் கால்நடை உதவி மருத்துவர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சரக அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு நீர்நாயை பிரேத பரிசோதனை செய்தார். நீர்நாய் இயற்கையான முறையில் இறக்கவில்லை என்று தெரிவித்தார். பிரேத பரிசோதனையை வீடியோ

பதிவு செய்தோம். அப்போது நீர்நாய் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தகசிவு ஏற்பட்டு இறந்ததாக மருத்துவர் சொன்னார். பிடிப்பொருட்கள் படிவம் 95 ஆவணம் பூர்த்தி செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியின் பெயரில் இறந்த நீர்நாயை வனசரக அலுவலகத்தின் இடத்திலேயே புதைக்கப்பட்டது. அதை வீடியோ பதிவு செய்தோம். மேற்படி இரண்டு வீடியோக்களையும், சிடியில் பதிவேற்றம் செய்யப்பட்ட புகைப்படங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு கு.வி. செய்வதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 125/2023 PW . 4**

**பெயர் : கண்ணபிரான்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்: வனக்காப்பாளர், வாராப்பூர்**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025

---

**(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>03.04.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் 31.03.2024ம் தேதி சிவகங்கை வனக்கோட்டம், சிவகங்கை வனசரகம், கரிசல்பட்டி பிரிவு வாராப்பூர் பீட் பிரிவில் வனக்காப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கொட்டாம்பட்டியில் வசிக்கிறேன். கடந்த 27.05.2021ம் தேதி வாராப்பூர் பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் கரிசல்பட்டி பிரிவு வனவர் பிரகாஷ் என்னை செல்போனில் தொடர்புகொண்டு பழைய நெடுவயல் கிராமத்தில் உள்ள கண்மாயில் மீன் பிடிக்க சென்ற நபர்களின் வலையில் நீர்நாய் சிக்கி உள்ளது என்று தகவல் சொன்னார். அதனை மீட்பதற்காக நான் விரைந்து சம்பவ இடத்திற்கு 5.30 மணிக்கு சென்ற போது அங்கு வனக்காப்பாளர் சரவணன், மிகைப்பணி வனக்காவலர் கோபுர பாண்டியன், வனவர் பிரகாஷ் ஆகியோர் இருந்தார்கள். அங்கு நீர்நாய் ஒன்று நைலான் கயிறால் கழுத்தில் எதிரிகள் கட்டி வைத்திருந்தார்கள். வனசரகருக்கு தகவல் சொன்னோம். சிறிது நேரத்தில் நீர் நாய் இறந்துவிட்டது. அப்போது எதிரிகளை விசாரித்தோம். மீன்பிடித்த போது அந்த வலையில் நீர்நாய் சிக்கிவிட்டதாக எதிரிகள் தெரிவித்தார்கள். அப்போது எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் சரவணன் பதிவு செய்தார். நானும் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். வனவர் சம்பவ இடத்தில் வைத்து H நமுனா தயார் செய்யப்பட்டது. மேலும் சம்பவ இடத்தில் பார்வைமகசர் (அ.த.சா.ஆ.5) ஸ்தல மகசர் (அ.த.சா.ஆ.4) போன்ற ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது. அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். எதிரிகள் மற்றும் பிடிப்பொருட்களை வனசரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம்.

2. எதிரிகளை 1972 வன உயிர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 50ன் படி கைது செய்யப்பட்டு வனஉயிரினமான நீர்நாய் என்பதால் வனஉயிர் பாதுகாப்புச்சட்டம் அட்டவணை 2 பாகம் 2 வரிசை எண் 4ன் படி நீர்நாய் அரியவகை உயிரினம் என்பதால் திருப்பத்தூர் வனரசக அலுவலவன குற்ற எண். 18/2023 பதிவு செய்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து கனம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம். எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துகளில் ஒன்றான நீர்நாயை எஸ்.புதுார் கால்நடை உதவி மருத்துவர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சரக அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு நீர்நாயை பிரேத பரிசோதனை செய்தார். பிரேத

பரிசோதனையை வீடியோ பதிவு செய்தோம். பிடிப்பொருட்கள் படிவம் 95 ஆவணம் பூர்த்தி செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியின் பெயரில் இறந்த நீர்நாயை வனசரக அலுவலகத்தின் இடத்திலேயே புதைக்கப்பட்டது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு கு.வி. செய்வதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 125/2023 PW . 5**

**பெயர் : கோபுரபாண்டியன்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்: மிகைப்பணிகாவலர்**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025

---

**(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>03.04.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கை வனக்கோட்டம், சிவகங்கை வனசரகம், மானாமதுரை பீட் பிரிவில் மிகைப்பணிகாவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2021ம் தேதி கரிசல்ப்பட்டி பீட் மிகைப்பணி காவலராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் கரிசல்பட்டி பிரிவு வனவர் பிரகாஷ் என்னை செல்போனில் தொடர்புகொண்டு பழைய நெடுவயல் கிராமத்தில் உள்ள கண்மாயில் மீன் பிடிக்க சென்ற நபர்களின் வலையில் நீர்நாய் சிக்கி உள்ளது என்று தகவல் சொன்னார். அதனை மீட்பதற்காக நான் விரைந்து சம்பவ இடத்திற்கு 5.30 மணிக்கு சென்ற போது அங்கு வனக்காப்பாளர் சரவணன், வனவர் பிரகாஷ் ஆகியோர் இருந்தார்கள். அங்கு நீர்நாய் ஒன்று நைலான் கயிறால் கழுத்தில் எதிரிகள் ஜேசிபி வாகனத்தில் கட்டி வைத்திருந்தார்கள். வனசரகருக்கு தகவல் சொன்னோம். சிறிது நேரத்தில் நீர் நாய் இறந்துவிட்டது. அப்போது எதிரிகளை விசாரித்தோம். எதிரிகள் என்ன விபரம் சொன்னார்கள் என்று ஞாபகமில்லை. பிறகு சம்பவ இடத்திற்கு அரசு கால்நடை மருத்துவரை வரச்சொல்லி அங்கு பரிசோதித்து பார்த்தார். நீர் நாய் இறந்திருந்தது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் ஸ்தல மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதான். நீர்நாயை மீட்க சென்ற போது நான் மேற்படி ஆவணங்களில் கையொப்பம்செய்தேன். பின்னர் நீர்நாய் மற்றும் எதிரிகளை அழைத்துக்கொண்டு வரசரக அலுவலகத்திற்கு வந்தோம். அதன்படி சட்டப்படி நடவடிக்கை எடுத்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு கு.வி. செய்வதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.